அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை: 03/2018

எனது இல: EST-4/02/REM/0197
அரசாங்க நிர்வாக மற்றும்
முகாமைத்துவ அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2018.02.20

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

**ஓய்வுபெற்ற அரசாங்க அலுவலர்களை மீளச் சேவையில் ஈடுபடுத்தல்**

ஓய்வுபெற்ற அரசாங்க அலுவலர்களை மீளச் சேவையில் ஈடுபடுத்துவது தொடர்பான ஏற்பாடுகள் உள்ளடங்கிய 2007.05.11 ஆந் திகதிய 09/2007 ஐக் கொண்ட அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை மற்றும் அதில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்ட அரசாங்க நிர்வாக சுற்றறிக்கைகள் ஆகியன இத்தால் இரத்துச் செய்யப்படுவதுடன், கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் 2018.02.01 ஆந் திகதியிலிருந்து அமுல்படுத்தப்படும்.

02. அமைச்சுக்களின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள்/ ஏனைய அரசாங்க நிறுவனங்களின் தலைவர்களால், தமது மனித வளத் தேவைப்பாடுகளை பிற அபிவிருத்தித் திட்டங்களுடன் நேரகாலத்துடன் இனங்காணல், தொடர் மனிதவள தேவைப்பாடுகளை ஒரேயடியாக இனங்காண்பதற்கு முடியுமானவாறு தமது பணியாட்தொகுதியின் அலுவலர்கள் தொடர்பான தகவல்களை தயார்செய்து வைத்துக்கொள்ளல், நிறுவனத்தின் அலுவலர்கள் ஓய்வுபெறுவதன் காரணமாகவோ அல்லது பதவியுயர்வு பெறுவதன் காரணமாகவோ வெற்றிடமாகும் பதவிகளுக்கு நியமிக்கப்பட வேண்டிய தகுந்த ஆட்களை நேரகாலத்துடன் இனங்காண்பதற்குத் தேவையான வேலைத்திட்டமொன்றை அமுல்படுத்தி வைத்திருத்தல் போன்ற செயற்பாடுகள் மேற்கொள்ளப்படவேண்டியதுடன், அதன் மூலம் தகுந்த அலுவலர் ஒருவரை இனங்காண முடியாமற்போகும் வேளையில் மாத்திரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ள செயன்முறைகள் கடைப்பிடிக்கப்படுதல் வேண்டும்.

I. அறுபது (60) வயதைக் கடந்த ஓய்வு பெறுநர் ஒருவர் அரச சேவையில் அங்கீகரிக்கப்பட்ட பதவியொன்றில் சேவையில் அமர்த்தப்படலாகாது.

II. ஆயினும், பதிலீட்டு அலுவலர் ஒருவரை நியமிப்பதற்கு சிரமமாக உள்ளவிடத்தும், பதிற் கடமையாற்றுதல் போன்ற மாற்றுச் செயற்பாடுகளின் மூலம் தற்பொழுது சேவையில் உள்ள அலுவலர்களினால் அதனை நிறைவேற்றிக் கொள்வதற்கு முடியாதவிடத்தும், அத்தியாவசியமான பதவிகளுக்கு மாத்திரம் குறித்த அமைச்சுச் செயலாளரின் தனிப்பட்ட பரிந்துரையின் பேரில், ஓய்வு பெற்ற அலுவலரொருவரை ஆகக் கூடியது பன்னிரண்டு (12) மாதங்கள் என்ற வரையறையின் கீழ் உரிய அதிகாரி நியமனம் செய்ய முடியும். அமைச்சின் கீழ் உள்ளடக்கப்படாத திணைக்களம் தொடர்பில் திணைக்களத் தலைவர் தனிப்பட்ட முறையில் இத் தேவைப்பாட்டை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

III. ஓய்வு பெற்றதன் பின்னர், பன்னிரண்டு மாதங்கள் (12) அல்லது அதற்கு அதிக காலம் ஏற்கெனவே மீளச் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள அலுவலர் ஒருவரை, அவ்வாறு ஒப்பந்த அடிப்படையிலான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்யும் வரை மாத்திரமே சேவையில் ஈடுபடுத்த முடியும். குறித்த நிறுவனத்தினால் கோரப்படும் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு, அப் பதவிக்குரிய, நியமனம் வழங்கும்/அதிகாரமளிக்கப்பட்ட/ நிர்வாக அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரி ஒருவரினால், அவ் வெற்றிடத்தை, நிரந்தர சேவையிலுள்ள தகுந்த அலுவலர் ஒருவர் மூலமாக உரிய தினத்தில் பூர்த்தி செய்து கொள்ள முடியாதென, எழுத்து மூலம் அறிவிக்கப்படுகின்ற சந்தர்ப்பம் தவிர, அவ்வலுவலர் மீளச் சேவையில் அமர்த்தப்படலாகாது.

IV. எக்காரணம் கொண்டும் 67 வயதைப் பூர்த்தி செய்த எந்தவொரு நபரையும் அரச சேவையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியொன்றில் நியமனம் செய்தலாகாது.

V. ஓய்வு பெறுநர் ஒருவர் மீளச் சேவையில் அமர்த்தப்படும் காலப்பகுதிக்குள், திணைக்களத் தலைவரினால் பொருத்தமான பதிலீட்டு அலுவலர் ஒருவர் இனங்காணப்பட வேண்டும். அத்துடன் அவ்வாறு இனங்காணப்பட்ட அலுவலரைப் பயிற்றுவிக்கும் நடவடிக்கையை, மீளச் சேவையில் அமர்த்தப்பட்ட ஓய்வுபெறுநரின் பொறுப்பாக, அவருக்கு ஒப்படைத்தல் வேண்டும்.

03. ஓய்வுபெறுநர் ஒருவர் மீளச் சேவையில் அமர்த்தப்படும் போது/ பதவியொன்றுக்கு நியமிக்கப்படும் போது பின்வருமாறு மாதாந்த வேதனம் வழங்கப்படுதல் வேண்டும்.

I. அரச சேவையில் ஓய்வுபெற்ற அலுவலரொருவர் சேவை இடையறுந்து அல்லது இடையறாது, தாம் முன்னர் வகித்த பதவியிலேயே மீண்டும் சேவையில் ஈடுபடுத்துமிடத்து, அவர் அரச சேவையில் இறுதியாகப் பெற்ற மாதாந்த சம்பளத்துக்கு ஈடான மாதாந்த கொடுப்பனவைச் செலுத்துதல்.

II. அவர் ஓய்வுபெறும் சந்தர்ப்பத்தில் உரித்தாகவிருந்த சம்பள அளவுத்திட்டத்தைப் பார்க்க உயர்ந்த சம்பள அளவுத்திட்டத்தை உடைய மற்றுமொரு பதவியில் மீண்டும் சேவையில் ஈடுபடுத்தப்படுமிடத்து, அவருக்கு அரசாங்க சேவையின் மேற்படி 03.I இன் சம்பளம் அல்லது அவர் மீண்டும் சேவையில் ஈடுபடுத்தப்படும் பதவியின் தொடக்கச் சம்பளம் ஆகிய இரண்டில் கூடிய சம்பளத்துக்குச் சமமான மாதாந்த கொடுப்பனவைச் செலுத்துதல்.

III. ஓய்வுபெறும் சந்தர்ப்பத்தில் உரித்தாகவிருந்த சம்பள அளவுத் திட்டத்தைப் பார்க்கக் குறைந்த சம்பள அளவுத் திட்டத்தை உடைய மற்றுமொரு பதவியில் மீண்டும் சேவையில் ஈடுபடுமிடத்து, அவருக்கு மேற்படி 03.I இல் குறிப்பிடப்பட்டுள்ள கொடுப்பனவு அல்லது புதிய பதவிக்குரிய சம்பள அளவுத் திட்டத்தின் நேரொத்தான சம்பளப் படிநிலை ஆகிய இரண்டில் குறைந்த சம்பளத்துக்கு ஈடான மாதாந்த கொடுப்பனவைச் செலுத்துதல். (நேரொத்த சம்பளப் படிநிலை எனக் கருதப்படுவது, ஓய்வுபெறும் சந்தர்ப்பத்தில் வகித்த பதவிக்குரிய சம்பள அளவுத்திட்டத்தில் உழைத்துப் பெற்றிருந்த வேதனவேற்ற எண்ணிக்கைக்கு நேரொத்ததான, மீளச் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள பதவிக்கு ஏற்படைய சம்பள அளவுத் திட்டத்தின் வேதனவேற்ற எண்ணிக்கைக்கு அமைவான சம்பளப் படிநிலையாகும்.)

IV. கட்டாய ஓய்வு பெறும் வயதை அடைய முன்னர், ஓய்வுபெற்று மீள சேவையில் ஈடுபடுத்தப்படுகின்ற நபர்களின் ஓய்வூதியம், அவர் கட்டாயமாக ஓய்வுபெறவேண்டிய வயதை அடையும் திகதி, அல்லது மீண்டும் சேவையில் ஈடுபடும் ஒப்பந்த முடிவுத் திகதி, ஆகிய இரு திகதிகளில் முன்னராக அமையும் திகதி வரை மாத்திரம் நிறுத்தி வைத்தல்.

04. இச் சுற்றறிக்கையின் பணிகள் தொடர்பாக, “இறுதியாகப் பெறப்பட்ட சம்பளம்” எனக் கருதப்படுவது அலுவலர் ஓய்வுபெறும் சந்தர்ப்பத்தில் பெற்றுக் கொண்டிருந்த சம்பளமாகும். இறுதி வேதனவேற்றத் திகதியில் இருந்து ஓய்வுபெறும் திகதி வரையிலான வேதனவேற்றத்தில் உழைத்துப் பெற்றுக் கொண்ட பங்கு, அதில் உள்ளடங்காது.

05. அலுவலரொருவர் ஓய்வு பெறும் சந்தர்ப்பத்தில் பெற்றுக் கொண்டிருந்த சம்பள அளவுத் திட்டம் மீளமைக்கப்பட்டிருப்பின், அவர் மீள சேவையில் ஈடுபடுத்தப்படும் போது அவரது மாதாந்த கொடுப்பனவானது, திருத்தப்பட்ட சம்பள அளவுத்திட்டத்தின் நேரொத்த சம்பளப் படிநிலைக்கமைய வழங்கப்படுதல் வேண்டும்.

06. கட்டாய ஓய்வூதிய வயதை அடைந்ததன் பின்னர் ஓய்வுபெற்ற அலுவலர் ஒருவர் மீளச் சேவையில் அமர்த்தப்படின்/ நியமிக்கப்படின் அவ் ஓய்வுபெறுநரின் ஓய்வூதியம், நிறுத்தி வைக்கப்படாது தொடர்ச்சியாக வழங்கப்படும். அவர்களுக்கு ஓய்வூதியத்துடன், உரிய வாழ்க்கைச் செலவுப் படியும் கிடைப்பதுடன், மீள சேவையில் ஈடுபடுத்துதல்/ நியமித்தலின் கீழ், ஓய்வூதியத்துடன் உரித்தாகும் வாழ்க்கைச் செலவுப் படியின், மீதி அரைவாசியை, அவர் பெறும் மாதாந்த கொடுப்பனவுடன் வழங்கலாம்.

07. மேற்படி 03 இன் IV ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள மீளச் சேவையில் அமர்த்தப்படும் அலுவலர்களுக்கும், திருத்தப்பட்ட வாழ்க்கைச் செலவுப் படியைப் பெற்றுக் கொள்ள முடியும்.

08. அரசாங்க சேவையில் இருந்து ஓய்வு பெற்றதன் பின்னர் நிரந்தர அல்லது தற்காலிக பதவியொன்றுக்கு நியமிக்கப்படும் அனைத்து நபர்களுக்கும் இச் சுற்றறிக்கை ஏற்புடையதாகும்.

09. ஓய்வுபெறுநர் ஒருவரை மீளச் சேவையில் இணைத்துக் கொள்வது தொடர்பாக, அமைச்சுக்களின் செயலாளர்களினால், திணைக்களத் தலைவர்களினால் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவுக்கு சிபார்சு செய்யப்படும் போது, இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப்படிவத்துக்கமைய தகவல்கள் வழங்கப்பட வேண்டியதுடன், அப்படிவத்தின் 13 ஆம் பந்தியை நிரப்பும் போது, பின்வரும் விடயங்களை அதில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கும்படியும் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

I. குறித்த அலுவலர் உரிய அதிகாரி மூலம் சரியான முறையில் ஓய்வுபெறச் செய்யப்பட்டாரா, இல்லையா என்பது பற்றியும், அவ்வாறாயின் அது சாதாரண ஓய்வுபெறுதலா அல்லது ஓய்வூதியப் பிரமாணக் குறிப்பின் 12 ஆம் பிரிவின் கீழ்வரும் ஓய்வுபெறுதலா என்பது பற்றியும் குறிப்பிடுதல் வேண்டும்.

II. குறித்த அலுவலர், ஒழுக்காற்று காரணங்களால், வினைத்திறனின்மை, திருப்திகரமற்ற சேவை போன்ற காரணங்களினால் ஓய்வு பெறச் செய்யப்படவில்லை என்பது பற்றி குறிப்பிடுதல் வேண்டும்.

III. குறித்த அலுவலரது ஓய்வுபெறுதலுக்கு முன்னைய சேவைக்காலம் திருப்திகரமானது என்பது பற்றியும், எதுவித ஒழுக்காற்றுத் தண்டனைகளும் பெறவில்லை என்பது பற்றியும் குறிப்பிடுதல் வேண்டும்.

10. ஓய்வுபெறுநர் ஒருவரை மீளச் சேவையில் ஈடுபடுத்தியுள்ளபோது/ நியமித்துள்ளபோது, அப் பதவிக்குரிய ஏனைய வசதிகளும் வழங்கப்படுதல் வேண்டும்.

11. 2018.02.01 ஆந் திகதியளவில் மீளச் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள/ நியமிக்கப்பட்டுள்ள ஆட்களது மாதாந்த கொடுப்பனவுகளையும், மேற்படி 03 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, இச் சுற்றறிக்கை வலுப்பெறும் தினத்திலிருந்து திருத்தியமைக்கப்படுதல் வேண்டும்.

12. இச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கமைய ஓய்வுபெற்ற அரசாங்க அலுவலர் ஒருவர், மீளச் சேவையில் ஈடுபடுத்தப்படும்போது, மாதாந்த சம்பளமாக கொடுப்பனவொன்று வழங்கப்படுவதனால், ஓய்வூதியப் பிரமாணக் குறிப்பின் ஏற்பாடுகளுக்கமைய, அவ்வலுவலரின் ஓய்வூதியம் மீளமைக்கப்படலாகாது.

13. பொதுத் திறைசேரியின் உடன்பாட்டுடன் இச் சுற்றறிக்கை வெளியிடப்படுகின்றது.

ஒப்பம்/. ஜே.ஜே. ரத்னசிறி
செயலாளர்
அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு

## ஓய்வுபெற்ற அரசாங்க அலுவலர்களை மீளச் சேவையில் ஈடுபடுத்துதல்

01. பரிந்துரைக்கப்பட்ட அலுவலரின் பெயர் :-

02. உரித்தாகும் சேவை மற்றும் தரம் :-

03. பிறந்த திகதி :-

04. தேசிய அடையாள அட்டை :-

05. மீளச் சேவையில் ஈடுபடுத்துவதற்கு பரிந்துரைக்கப்பட்ட பதவியும் தரமும் :-

06. கால எல்லை :-

07. பரிந்துரைக்கப்பட்ட பதவிக்குரிய தகவல்கள் :-

| அங்கீகரிக்கப்பட்ட மொத்த பணியாட்தொகுதி | வெற்றிடங்களின் எண்ணிக்கை | வெற்றிடம் நிலவுவதற்கான காரணம் | வெற்றிடம் நிலவிய திகதி | வெற்றிடத்தை நிரந்தரமாக நிரப்புவதற்குள்ள தடைகள் |
|---|---|---|---|---|
| | | | | |

08. வெற்றிடமாகவுள்ள பதவிக்கான பணிகளை சேவை நிலையத்திலுள்ள ஏனைய அலுவலர்களைக் கொண்டு மேற்கொள்ள முடியாதா என்பது பற்றியும் அதற்குரிய காரணங்களும் :-

09. அவ்வாறாயின், இப் பதவியில் பதில் கடமையாற்றும் அடிப்படையில் நியமிக்கக்கூடிய அலுவலர்கள் உள்ளனரா/ இல்லையா என்பது பற்றியும் அவ்வாறாயின், அப்பதவிக்கு அவ்வாறான அலுவலர்கள் பரிந்துரைக்கப்படாமைக்கான காரணங்கள் :-

10. அலுவலர் இறுதியாக சேவையாற்றிய பதவி :-

11. சேவை நிலையம் :-

12. அலுவலர் ஓய்வுபெற்ற திகதி :-

13. ஓய்வுபெற்ற விதம் :-

14. அலுவலர் இதற்கு முன்னர் மீளச் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தாரா :-

15. அவ்வாறாயின் எவ்வாறான பதவி என்பது பற்றியும், அது தொடர்பாக அங்கீகாரமளித்தவர் யார் என்பது பற்றியும், குறித்த பதவிக்கான கால எல்லையையும் குறிப்பிடுக :-

16. இவ்வலுவலர் பரிந்துரைக்கப்பட்டமைக்கான விசேட காரணம் :-

17. அலுவலருக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணைகள் இடம்பெறுகின்றனவா/ இடம்பெற்றனவா :-

18. அலுவலருக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணைகள் இடம்பெற்றிருப்பின், ஒழுக்காற்றுக் கட்டளையைக் குறிப்பிடுக :-

திகதி

......................................................

திணைக்களத் தலைவர்

திகதி

......................................................

அமைச்சுச் செயலாளர்